# திருவாசகப் பாடல்களில் அழுகையெனும் மெய்ப்பாடு

சி. செரஞ்சன்[1]

## ஆய்வுச்சுருக்கம்:

*நாயன்மார்களில் ஒருவராகத் திகழும் மாணிக்கவாசகரின் திருவாசகமானது பன்னிரு திருமுறைகளின் வரிசையில் எட்டாந் திருமுறையில் வைத்துப் போற்றப்படுகின்றது. தெய்வத்தன்மை வாய்ந்த வாசகம் 'திருவாசகம்' என்னும் சொல்லுக்கிணங்க இது ஐம்பத்தொரு பதிகங்களால் தத்துவக் கருத்துக்களையும், வாழ்வியல் கோட்பாடுகளையும், பக்திச் சுவையையும் விளக்குவதாக அமைந்துள்ளது. திணிந்த இருளில் கட்டுண்டுகிடக்கும் ஆன்மா பேரொளியைத் தேடிச்செல்லுங்கால் தோன்றும் பலவகையான நிகழ்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் சுவைபொதிந்த திருப்பதிகங்களால் எடுத்தோதும் தெய்வீகக் கவிதையாகவும் இது விளங்குகின்றது. திருவாசகத்தைப் பக்திப் பாடலாக மட்டும் பார்க்காமல் அதனை கவிதையாகப் பார்க்கவைப்பது அதன் கண்ணுள்ள உவமைகளும், மெய்ப்பாடுகளுமேயாகும். இவையே கவிதைக்கு அழகைத்தருவன. அந்த அழகு படிப்போரின் உள்ளத்தைக் கவர்ந்து நெஞ்சை உருக்கவைப்பதாக உள்ளது. உள்ளத்தை உருக்கும் மெய்ப்பாடுகளுள் அழுகை என்ற மெய்ப்பாட்டினை மாணிக்கவாசகர் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதனை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். விபரணமுறை, பகுப்பாய்வுமுறை, ஆகிய அணுகுமுறைகளில் இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டு ஆய்வுமுடிவுகள் பெறப்பட்டன. இவ்வகையில் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தமது பக்தி வைராக்கிய நிலையினை வெளிப்படுத்தும் விதமாக மெய்ப்பாட்டினை ஓர் உத்தியாகக் கையாண்டுள்ளார். மெய்ப்பாட்டியலில் ஒன்றாகிய அழுகை என்பது பக்திப் பாடல்களில் துன்பத்தின் வெளிப்பாடன்று. இறையருளை முழுமையாகப் பருக நினைக்கும் போது அடியவர்களது உள்ளத்து உணர்வாக அழுகை என்னும் உணர்ச்சி வெளிவருகின்றமையினைக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது. தொல்காப்பியர் கூறிய அழுகையென்னும் மெய்ப்பாட்டையும் அது தோன்றுவதற்கான நிலைக்களன்களையும் திருவாசகப்பாடல்களில் மாணிக்கவாசகர் பயன்படுத்தியதோடு அவற்றை இன்னும் விரிந்த தளத்திற்கு இட்டுச்சென்றுள்ளமையை இவ்வாய்வின் வழி கண்டுணரமுடிகிறது.*

**திறவுச்சொற்கள்:** திருவாசகம், அழுகை, மெய்ப்பாடுகள், பக்திச்சுவை, மாணிக்கவாசகர்

[1] *தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
seranjan96@gmail.com

**அறிமுகம்**

மாணிக்கவாசகர் அருளிய நூல்களாகத் திருவாசகமும் திருக்கோவையாரும் விளங்குகின்றன. இவர் தாம் அனுபவித்த அருளாகிய இன்ப உணர்வுகளை ஏனைய மக்களும் விளங்கிக் கொள்ளும்படி கவிதையின்பத்தினை இணைத்துத் தெய்வீக நூல்களாகப் பாடியுள்ளார். திருவாசகத்தை இறைவனே எழுதினார் என்றும், அதனை எழுதிய பின் இறைவன் வேண்ட மாணிக்கவாசகர் திருக்கோவையாரைப் பாடியதாகவும் கூறுவர். திருவாசகமானது சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தியொரு பதிகங்களையும் அறுநூற்று ஐம்பத்தாறு பாடல்களையும் கொண்டுள்ளதுடன் சிவபெருமானைப் போற்றிப் பரவும் பக்தி நூலாகவும் விளங்குகின்றது. மணிவாசகம், மதுரவாசகம், வாசகத்தேன் எனப் பல பெயர்களாலும் திருவாசகம் அழைக்கப்படுகிறது.

திருவாசகம் என்பதற்கு, **‘திரு என்றால் அழகு, வாசகம் என்பது வார்த்தை அல்லது சொல் எனப்படும். எனவே அழகிய சொற்களைக் கொண்ட நூல் திருவாசகம். திரு என்பது அருள். வாசகம் என்பது வாக்கு. எனவே அருள்வாக்கு’** என்றும் விளக்கம் கூறுகின்றனர். (ச. தண்டபாணி தேசிகர், திருவாசகப் பேரொளி, ப. 08)

**‘திரு என்பதற்கு கண்டரால் விரும்பப்படும் தன்மை, நோக்கம் என உரை காண்பார் பேராசிரியர். இதனைக் கண்டவர் வேறு எதனையும் விரும்பமாட்டார். ஆதலால் பக்குவப்பட்ட ஆன்மாக்களால் விரும்பப்படும் வாசகம்’** என்றும் பொருள் கொள்வார் சிலர். (கதிரேசச் செட்டியார், திருவாசகம், ப. 05)

**“திருவாசகம் என்பது மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை மெய்ப்பொருளைத் தரும் வார்த்தை”** என்று வள்ளலார் கூறியுள்ளார். (இராமலிங்க வள்ளலார், திருவருட்பா, ப. 108)

அந்தவகையில் தான் மட்டும் தனிநிலையில் உணர்ந்த திருவருள் அனுபவத்தைத் தம்முடைய உள்ளத்தில் எழுந்தபடியே கவிதைச்சுவை பொதிந்த சொற்களால் ஆன்மாவின் வரலாறாகத் திருவாசகத்தை மாணிக்கவாசகர் படைத்துள்ளார். புதுமைகள் பலவற்றைத் தன்னுடைய படைப்பில் படைத்தருளிய மாணிக்கவாசகர் எளிய சொற்களால் விழுமியப் பொருளால் எல்லோரையும் தன்வயப்படுத்தும் சுவையுணர்ச்சி பொதிந்த பாடலாகத் திருவாசகத்தைப் படைத்துள்ளார் எனலாம்.

**மெய்ப்பாடு என்பதன் விளக்கம்**

மெய்ப்பாடு என்பதற்கு ‘வெளிப்பாடு’ என்பது பொருளாகும். சுவை என்றாலும் மெய்ப்பாடு என்றாலும் ஒரே கருத்தையே தருகின்றது. சுவையுணர்ச்சியே விருப்பு, வெறுப்புகளைத் தந்து மெய்க்குறிகளுடன் வெளிப்படுத்துவதாதலின் சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயராயிற்று எனலாம். நாவாகிய பொறிகளினால் அறியப்படுகின்ற இனிப்பு, புளிப்பு,

கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு என்கின்ற சுவைகள் போன்று கண்ணினாலும் செவியினாலும் அறியப்படுகின்ற சுவைகள் எட்டாகும். இவற்றையே தொல்காப்பியர்

**''நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பா லெட்டே மெய்பா டென்ப''** (தொல். பொருள். சூத். 252)

என்ற சூத்திரத்தில் மெய்ப்பாடெனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எட்டுவகையான மெய்ப்பாடுகளும் தோன்றுவதற்கான நிமித்தங்களை நான்காக வகைப்படுத்தி முப்பத்திரண்டு விதமான உணர்ச்சி அனுபவங்களாகக் குறிப்பிட்டுள்ளமை யினை,

**''பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான்கென்ப''** (தொல். பொருள். சூத். 251)

என்ற நூற்பாவினூடாக அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறான மெய்ப்பாடுகளின் வெளிப்பாடுகளை கண்ணினாலும் செவியினாலும் அறிந்து கொள்ள முடியுமென்றாலும் அது கற்றறிந்த பெருமக்களுக்கே புலப்படும் என்பதனை,

**''கண்ணினுஞ் செவியுனுந் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே''**

(தொல். பொருள். மெய். சூத். 27)

என்ற சூத்திரத்தினூடாக அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாகவே மெய்ப்பாட்டினைக் கருதியுள்ளார் என்பதனை,

**''பயனே மெய்பாடெச்ச வகைஎனாஅ''**

(தொல். பொருள். செய்யுள்: சூத். 1)

என்ற நூற்பாவினூடாக அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## திருவாசகப் பாடல்களில் புலப்படுத்தப்படும் மெய்ப்பாடுகள்

பக்திப் பாடல்களிலும் அகமரபுப் பாடல்களிலும் பெரிதும் போற்றப்பட்ட உணர்ச்சி அம்சங்கள் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டன. அடியவர்களின் மனதில் ஏற்படும் பக்திப்பரவச நிலையின் காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்களை 'மெய்ப்பாடுகள்' என்றே அழைப்பர். மெய்ப்பாடுகள் தோன்றும் வண்ணம் கவிதை இயற்றப்பட வேண்டும் என்பதற்குச் சான்றாக,

**''மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து**
**உன் விரையார் கழற்கு என்**
**கைதான் தலை வைத்து**

**கண்ணீர் ததும்பி, வெதும்பி உள்ளம்**

**பொய்தான் தவிர்த்து உன்னைப்....''** (திருச்சதகம். 01)

என்ற பாடலானது விளங்குகின்றது.

**நகை**

திருவாசகப் பாடல்களில் பக்திச்சுவையினை வெளிப்படுத்தும் விதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள உணர்வுகளை நோக்குவோம். எட்டுவகையான மெய்ப்பாடுகளில் முதலாவது அமைவது நகையாகும். இது எள்ளல், இளமை, பேதைமை, மடமையென நான்கு வகையாகத் தோன்றுமெனத் தொல்காப்பியர் (சூத். 05) குறிப்பிடுகின்றார். இவை நான்கும் ஒன்றிரண்டாகி எட்டாதலும் உண்டு. உதாரணமாக, எள்ளல் என்பது தான் பிறரை எள்ளி நகைத்தலும், பிறரால் எள்ளப்பட்ட வழி நகைத்தலும் இரண்டாதல் போல எட்டு வகையாகவும் கூறலாம். இச்சுவையினை திருவாசகப் பாடல்களில் பலவிடங்களிலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனை,

**“ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ**

**வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ''** (திருவெம்பாவை.07)

என்ற பாடலில் விடியற்காலையில் துயில் எழுந்த மகளிர், எழாமல் தூங்கிக் கொண்டிருக்கும் தலைவியைப் பார்த்து ஒளிபொருந்திய முத்துப் போன்ற பல்லினை உடையவளே இன்னும் உனக்குப் பொழுது விடியவில்லையா? என்று எள்ளல் தன்மையோடு வினவ, அதற்குத் தலைவி விடை கூறுவதைப் போல அமையப்பெற்ற பாடலடிகளிலும் எள்ளல் சுவையே மிகுந்துள்ளது.

நீத்தல் விண்ணப்பப் பகுதியில் அமைந்த பாடலில் மாணிக்கவாசகர், இறைவனை நோக்கி **‘சிவபெருமானே! என்னைக் குற்றம் செய்தவன் என்று நீ வெறுத்து ஒதுக்கினால், உன்னை ஊரார் பழித்து நகைக்கும் படி செய்து விடுவேன் என்பதனை,**

**“சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்**

**தொழும்பையு மீசற்கென்று**

**விரிப்பிப்ப னென்னை விடுதிகண்''** (நீத்தல் விண்ணப்பம். 49)

என்ற செய்யுளில் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இச்செய்யுளில் தோன்றிய நகைச்சுவை உணர்வானது பிறர்கட் தோன்றிய பேதைமையின் பாற்படும்.

**இளிவரல்**

இளிவரல் எனும் மெய்ப்பாடானது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்கின்ற நான்கு பொருளின் அடியாகப் பிறக்குமெனத் தொல்காப்பியம் (சூத்.06) கூறுகின்றது. இவ்வாறான உணர்வினை வெளிப்படுத்தும் விதமாக அமைந்த திருவாசகப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக,

**“எண்ணிலேன் திருநாமம் அஞ்சு எழுத்தும் என்**

**ஏழைமை அதனாலே**

**நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடு''** (அதிசயப் பத்து. 06)

என்ற பாடலைக் குறிப்பிடலாம். இப்பாடலில் மாணிக்கவாசகர், ஐந்தெழுத்தாகிய அவன் திருநாமத்தை நான் எண்ணினேன் இல்லை. இதைத்தான் செய்யவில்லையென்றாலும் கலை ஞானம் பெற்ற ஞானிகள் அருகில் சென்று என் அறிவையும் வளர்த்துக் கொள்ளவில்லை. ஆதலால், பக்தி வழி, ஞானவழி ஆகிய இரண்டும் அடைபட்டுவிட்டன எனக் கூறுவதானது வருத்தம் பற்றி வந்த இளிவரலாகும்.

திருவாசகத்திலுள்ள பல பாடல்கள் இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. அந்தவகையில் மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி,

**"அருளா தொழிந்தால் அடியேனை**
**அஞ்சேல் என்பார் ஆர் இங்குப்**
**பொருளா என்னைப் புகுந்தாண்ட**
**பொன்னே பொன்னம் பலக் கூத்தா''** (கோயில் மூத்த திருப்பதிகம். 08)

என்று பாடிய பாடலில் 'மயக்கம் பொருந்திய மனத்தோடு உம்மைப் பிரிந்து வருந்துகின்ற என்னை வாவென்று அழைத்து உமது அடியார் திருக்கூட்டத்தைக் காட்டாவிடில் யான் இறந்து போனால் உலகத்தார் நகைக்கமாட்டார்களா?' என்ற கருத்துச் செறிந்துள்ளதால் இது வருத்தம் காரணமாகத் தோன்றிய இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

**மருட்கை**

வியப்புப் பொருளில் வருவன மருட்கையாகும். கீழ்மகனென்று அறிந்திருந்தும் அது பற்றிக் கவலையுறாமல் மேன்மக்களிலும் மேன்மக்கள் பெறவேண்டிய பதத்தை ஒரு விநாடியில் நல்கி விட்ட சிவனை நினைத்து வியப்படைவதனை

**"புலையனேனையும் பொருள் என நினைந்து உன்**
**அருள் புரிந்தனை புரிதலும் களித்துத்**
**தலையினால் நடந்தேன் விடைப் பாகா ....." (** செத்திலாப் பத்து. 03)

என்ற பாடலில் காணக் கூடியதாகவுள்ளது.

அதிசயப் பத்திலுள்ள ஒரு பாடல் மருட்கைச் சுவைக்கு உதாரணமாக அமைந்துள்ளது. அந்தவகையில் மாணிக்கவாசகர் தம்முடைய சிறுமையினையும் இறைவனுடைய பெருங்கருணைத் திறனையும் எடுத்தோதுவதனை,

**"எண்ணி லேன்திரு நாமஅஞ்**
**செழுத்தும்என் ஏழைமை யதனாலே**
**நண்ணி லேன்கலை ஞானிகள்**
**தம்மொடு நல்வினை நயவாதே''** (அதிசயப் பத்து. 06)

என்ற பாடலில் கண்டு கொள்ளலாம். இது சிறுமை காரணமாக வந்த மருட்கைச் சுவைக்கு உதாரணமாகும்.

**அச்சம்**

பயத்தின் காரணமாகத் தோன்றும் உணர்வுகளைக் குறிப்பது அச்சமாகும். மாணிக்கவாசகர் தன்னைச் சிறுமைத் தன்மையுடையவன் என்று நினைத்து, இறைவன் கைவிட்டு விடுவானோ என்ற பய உணர்வினால் பாடிய பாடல்களை நீத்தல் விண்ணப்பம், அச்சப்பத்து முதலான பகுதிகளில் காணக்கூடியதாகவுள்ளது. இதற்குச் சான்றாக,

**"கடையவனேனைக் கருணையினால்**
**கலந்து ஆண்டு கொண்ட**
**விடையவனே விட்டிடுதி கண்டாய்"** (நீத்தல் விண்ணப்பம். 01)

என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

இறைவனைப் போற்றி அவரது திருவருளைப் பெறாதவர்களின் நிலையை நினைத்து தாம் அஞ்சுவதாக,

**"வன்புலால் வேலும் அஞ்சேன்**
**வளைக்கையர் கடைக்கண் அஞ்சேன்**
**என்பெலாம் உருக நோக்கி**
**அம்பலத் தாடு கின்ற"** (அச்சப் பத்து. 03)

என்ற பாடல் அமையப் பெற்றுள்ளது. இப்பாடல் தீத்தொழில் புரிவோர் காரணமாகத் தோன்றும் அச்சச்சுவைக்குத் தக்க சான்றாகும்.

**பெருமிதம்**

அறிவு, ஆண்மை, பொருள் முதலிய சிறப்புக்களால் மனித மனங்களில் உயர்ந்து நிற்பது பெருமிதமாகும். தன்னைப் பெரியவனாக மதித்தல் இதன்பாற்படும். இவ்வாறான உணர்வு நிலையில் அமைந்த பாடல்களை 'பிடித்த பத்து', 'சென்னிப் பத்து', 'கோயில் மூத்த திருப்பதிகம்', 'கோயிற் திருப்பதிகம்' முதலான பகுதிகளில் கண்டு கொள்ளலாம்.

**"இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவது இனியே"** (பிடித்த பத்து. 03)

**"மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்**
**மனத்திடை மன்னிய மன்னே"** (கோயிற்றிருப்பதிகம். 05)

என்னும் பாடல்களில் அறிவின் காரணமாக வந்த பெருமித உணர்வைக் காண்டு கொள்ள முடிகின்றது.

**வெகுளி**

கை, கண் முதலான உறுப்புக்களைக் குறைத்தல் காரணமாகவும், சுற்றம், குடிப்பிறப்பு முதலியவற்றுக்குக் கேடு சூழ்தலாலும், கோல் கொண்டலைத்தலாலும், அறிவு, புகழ் ஆகியவற்றை அழித்துப் பேசுவதாலும் வெகுளி தோன்றுவது இயல்பாகும். இவ்வாறான உணர்வினை திருச்சதகம், ஆனந்த மாலைப் பகுதிகளிலுள்ள பெரும்பாலான பாடல்களில் அவதானிக்கலாம். சான்றாக,

**"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு**
**ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே**
**சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்"**

(திருச்சதகம். 20)

என்ற பாடலில் மாணிக்கவாசகர், நெஞ்சை நோக்கி 'வாழ்வது போல் நினைத்து வாழாது இருக்கின்றாயே! நான் உன்னை வற்புறுத்திச் சொல்லியும் இறைவனை வழிபடுதல் இல்லாமல், உனக்கு நீயே கேடு சூழ்ந்து துன்பக் கடலில் விழுந்து அழுந்துகின்றாய்' எனத் தனது மனதை கடிந்து கொள்வதால் வெகுளிச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அன்று திருப்பெருந்துறையில், என்னையும் என் அடிமைத்திறத்தையும் ஏற்றுக் கொண்டாய். ஆனால், இப்பொழுது என்னை ஒதுக்கி விட்டாய். என்னை மட்டும் ஒதுக்கி வைப்பது எந்த முறையில் நியாயமாகும் என இறைவனைக் கடிந்து கொள்ளும் வகையில்

**"தாயே என்று உன் தாள் அடைந்தேன்**
**தயா நீ என்பால் இல்லையே**
**நாயேன் அடிமை உடன் ஆக**
**ஆண்டாய் நான்தான் வேண்டாவோ"** (ஆனந்த மாலை. 05)

என்ற பாடலானது அமையப் பெற்றுள்ளது.

**உவகை**

உவகை என்பது மகிழ்ச்சியாகும். இது நுகர்ச்சி, அறிவுடைமை, காமப் புணர்ச்சி, விளையாட்டு முதலியவற்றால் தோன்றுகின்ற உணர்வாகும். திருவாசகத்திலுள்ள திருவெம்பாவை, திருவம்மானை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம் முதலான பகுதிகளில் அமையப் பெற்ற பாடல்கள் உவகைச் சுவையைத் தருவதாக அமைந்துள்ளன.

அந்தவகையில் அம்மானை என்பது மகளிர்களுக்குரிய விளையாட்டுக்களில் ஒன்றாகும். இவ்விளையாட்டினை பெண்கள் 'கழற்சியாடல்' என்றும் 'சொட்டங்கியாடல்' என்றும் அழைப்பர். காய் கொண்டு விளையாடும் போது தலைவனின் புகழைப்பாடி மகிழும் வகையில்

**"ஊனாய் உயிராய் உணர்வாய் என் உள்கலந்து**
**தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்**

**வானோர் அறியா வழியெமக்குத் தந்தருளும்**

**தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்"** (திருவம்மானை. 16)

என்ற பாடலில் 'உடல், உயிர், உணர்வு, உருவங்களாகி, எம்முள்ளே கலந்திருந்து, தேன் போல இனிமை தந்து முத்தி நெறியை எமக்கு உணர்த்தியருளிய சிவபெருமான்' என இறைவனின் பரத்துவ நிலையைப் பாடியுள்ளார்.

சிவபெருமானின் மீது கொண்ட அன்பின் காரணமாக மாணிக்கவாசகர் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவனை செய்து தான் இறைவன் மீது கொண்ட காதல் நிலையை எடுத்துரைப்பதாக,

**"சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள்**

**கூடுவேன் கூடி முயங்கி நின்று**

**ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்**

**தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்"** (திருவம்மானை. 17)

என்ற பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலானது அன்பின் காரணமாகத் தோன்றிய உவகை நிலையினைச் சார்ந்ததாகும்.

## திருவாசகப் பாடல்களில் அழுகையெனும் மெய்ப்பாடு

அழுகை என்பதற்கு அவலம், இரக்கம் என்பது பொருளாகும். தானே அழுவதும், பிறர் அவலம் கண்டு அழுவதுமென அழுகைச் சுவை இரண்டு வகைப்படும். அழுகையின் வகைகளை,

**"இளிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே"** (தொல். பொருள். சூத். 254)

எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். திருவாசகப் பாடல்களில் சிவனைப் பிரிந்த ஆற்றாமையினால் வருந்திப் பாடும் பகுதிகளில் அழுகைச் சுவையினை அதிகமாகக் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. இதனாலேயே சான்றோர்கள் **'வாக்கிற்கு அருணகிரி, வாதவூரர் கனிவில்'** எனப் போற்றியுள்ளனர். திருவாசகப் பாடல்களிலுள்ள அழுகைச் சுவையின் சிறப்பினைக் கருதி மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

"**மனங்கரைத்து மலங்கெடுக்கும்**

**வாசகத்தின் மாண்டோர்கள்**

**கனம்சடை என்று உருவேற்றிக்**

**கண்மூடிக் கதறுவரே"** (மனோன்மணீயம், பாயிரம். 12)

என்று கூறியிருப்பது இவ்வுண்மையினைத் தெளிவுபடுத்துகின்றது.

திருப்பெருந்துறையில் உன் அன்பினில் என்னைக் குழையச் செய்து ஆட்கொண்டவனே இப்பொழுது உன்னைக் கூட முடியாமல் அரற்றுகிறேன் இது உனக்குப் புரியவில்லையா? என்று புலம்பும் விதமாக,

**"அழகே புரிந்திட்டு அடி நாயேன்**
**அரற்றுகின்றேன் உடையானே**
**திகழா நின்ற திருமேனி**
**காட்டி என்னைப் பணி கொண்டாய்"** (குழைத்த பத்து. 10)

என்று முன்பு ஆட்கொண்ட திறத்தையும் சிவனுக்கு நினைவுபடுத்தி இனி உன்னைக் கூடுவதற்கான வழிகளை எனக்குக் கூறுவாயாக எனவும் இறைவனிடம் வேண்டி நிற்கின்றார். சிவனின் அருளில்லாமல் வாழ்வதனால் உலக வாழ்க்கை தனக்கு வெறுத்துப் போய்விட்ட நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டமையினை,

**"ஊடுவதும் உன்னோடு உவப்பதுவும் உன்னை**
**உணர்த்துவது உனக்கு எனக்கு உறுதி**
**வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்"** (வாழாப் பத்து. 28)

என்று அழுகைச்சுவை ததும்பும் விதத்தில் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர், அடைக்கலப்பத்திலுள்ள பாடலில் இறைவனை நோக்கி, 'உனது திருவருளாகிய அமுதத்தை அள்ளி விழுங்கினேன். என்னால் நல்வினைப் பயனைப் புரிந்து கொள்ள முடியாமற் போனதால் தங்களுடைய அருளை முற்று முழுதாக அடைய முடியாது போயிற்று. எனவே, தேனைப் போன்ற தண்ணீராகிய தங்கள் திருவருளை யான் பருகும்படி தந்தருள் புரியுமாறு,

**"வழங்குகின் றாய்க்குன் அருளார்**
**அமுதத்தை வாரிக்கொண்டு**
**விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்**
**என் விதியின்மையால்"** (அடைக்கலப்பத்து. 10)

என்று இரந்து பாடியுள்ளார். இது இன்ப நுகர்ச்சியை இழத்தல் காரணமாக வந்த அழுகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

நாயினும் கடைப்பட்ட எனக்கு முத்திநெறி காட்டித் தாயினும் இனிய அருள் சுரந்த என் தலைவனைக் காண இயலாத நான் தீயில் பாய்ந்திலேன், மலையினின்று உருண்டு உயிர் விடேன், ஆதலால் கடலில் விழுந்து இறப்பேனோ, அதுவும் செய்கிலேன் யான்' என்ற கருத்தமைந்த,

**"ஓய்வி லாதன உவமனில்**
**இறந்தன ஒண்மலர்த் தாள்தந்து**
**நாயி லாகிய குலத்தினுங்"** (திருச்சதகம். 39)

என்ற பாடலானது அவலச் சுவையின் காரணமாகத் தோன்றிய அழுகைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மாணிக்கவாசகர், இறைவன் அருள் கிடைத்தும், கிடைக்காத மன வேதனையின் வெளிப்பாடாக குயிற் பத்துப் பாடலைப் பாடியுள்ளார். தன் வருத்தத்தை நீக்க இறைவனிடம் சென்று அவனை வரும்படியாகக் கூவி வரவேண்டும் என்று வேண்டும் விதமாக

**“ஊன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய வொருத்தன்**
**மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக் கூவாய்”**

(குயிற் பத்து. 04)

என்ற பாடலைப் பாடியுள்ளார். இப் பாடலில் தன் உடலையும், உள்ளத்தையும் ஆட்கொண்ட இறைவனைப் பிரிந்து வாடும் மனத்துயரை வெளிப்படுத்தியுள்ளார்.

மாணிக்கவாசகர் சிவபெருமானின் அருளியல் வாழ்க்கையின் மீது ஏற்பட்ட வேட்கையினை உலகியல் வாழ்க்கையின் வழி அடையலாம் என்னும் எண்ணத்தை விதைக்கும் வகையில்

**புன்மை யேனை ஆண்டையா புறமே போக விடுவாயோ**
**என்னை நோக்குவார் யாரே என்நான் செய்கேன் எம்பெருமான்”**

(திருச்சதகம். 59)

என்ற பாடலைப் பாடியுள்ளார். இதில் தான் புன்மையுடையவன் என்று என்னை நினையாது ஆண்டு அருள் செய்து விட்டு இப்போது புறத்தே செல்ல விடுகிறாயே? நீயே அப்படிச் செய்தால் நான் என்ன செய்வேன்? எவ்விடத்தில் அடைக்கலம் புகுவேன் என்னை நோக்குவார் யார்? எனத் தன்னுடைய நிலையினை மாணிக்கவாசகர் வருந்திக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகர், இறைவன் மீது கொண்ட பெருங்கருணையின் பயனாக உணவின்றி, உணர்வின்றித் தவிக்கின்ற நிலையினையும் தன்னுடைய உள்ளமானது தன்னிடத்தில் இல்லையெனவும் அது சிவனிடத்தே சென்று தங்கி விட்ட நிலையினையும்,

**“ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு**
**என் உள்ளமும் போய் நான் கெட்டவா போடித்”**

(திருத்தெள்ளேனம். 18)

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். இது அசைவு பற்றி வந்த அவலச்சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அசைவு என்பது பண்டைய நிலைமை கெட்டு வேறொருவராகி வருந்துதலாகும்.

சிவபரம் பொருளையே தஞ்சம் என்று கொண்ட மாணிக்கவாசகர், ‘உன்னைத் தவிர பிற துணையைத் தேடவும் மாட்டேன், நீயில்லையே நான் வாழவும் மாட்டேன்’ எனத் தனது நிலையை சிவனுக்குக் கூறும் விதமாக,

**“தொழுவனோ பிறரை? துதிப்பனோ? எனக்கு ஓர்**
**துணை என நினைவனோ சொல்லாய்**

**மழ விடையானே வாழ்கிலேன் கண்டாய்''** (வாழப் பத்து. 10)

என்ற பாடலானது அமையப் பெற்றுள்ளது. இது உலக வாழ்வை வெறுக்கும் அவலச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

இறைவனைப் பிரிந்து ஆற்றாத நிலையிலே மாணிக்கவாசகர் அழுகைச் சுவை கலந்த பாடல்களைப் பாடியுள்ளார். இறைவனை நினைக்க நினைக்கத் தோன்றும் அழுகையால் பேரின்பத்தைப் பெறலாம் என்றும் அடியவர்களை இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்தும் தன்மையினை இவர் பாடல்களில் காணமுடிகின்றது.

**''யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே''**

(திருச்சதகம். 90)

என்று அழுகைச் சுவையினைப் பக்தியின் நெறியாகக் கூறுவதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

இவ்வழுகைச் சுவையினை ஏனைய சமய குரவர்களின் பாடல்களிலும் காணக் கூடியதாகவுள்ளது. சான்றாக,

**''தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று அழுது காழுற்று**
**அரற்றுகின்றாரையும் பொழுது நோக்கிப் புறக்கணிப்பாரையும்''**

(ஐந்தாம் திருமுறை: திருஇன்னம்பர். 08)

என்று திருநாவுக்கரசரும்,

**''தந்தையார் போயினார் தாயாரும் போயினார்**
**தாமும் போவார் கொந்தவேல் கொண்டொரு''**

(இரண்டாம் திருமுறை: திருவாரூர். 2325)

என்று திருஞானசம்பந்தரும்,

**''பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்**
**பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்''**

(ஏழாம் திருமுறை: திருவெண்பாக்கம். 2164)

என்று சுந்தரரும் பாடியிருக்கக் காணலாம்.

**நிறைவுரை**

மாணிக்கவாசகர் தமது பக்தி வைராக்கிய நிலையினை வெளிப்படுத்தும் விதமாக மெய்ப்பாட்டினை ஓர் உத்தியாகக் கையாண்டுள்ளார். மெய்ப்பாட்டியலில் ஒன்றாகிய அழுகை என்பது பக்திப் பாடல்களில் துன்பத்தின் வெளிப்பாடன்று. இறையருளை முழுமையாகப் பருக நினைக்கும் போது அடியவர்களது உள்ளத்து உணர்வாக அழுகை என்னும் உணர்ச்சி

வெளிவருகின்றமையினைக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது. தொல்காப்பியர் கூறிய அழுகையென்னும் மெய்ப்பாட்டையும் அது தோன்றுவதற்கான நிலைக்களன்களையும் திருவாசகப்பாடல்களில் மாணிக்கவாசகர் பயன்படுத்தியதோடு அவற்றை இன்னும் விரிந்த தளத்திற்கு இட்டுச்சென்றுள்ளார்.

## உசாத்துணை

அருளம்பலவாணர். சு., (1993), திருவாசகம், ஆராய்ச்சியுரை, பகுதி I, பகுதி II, பாரிநிலையம், சென்னை.

அண்ணாமலை. மு., (2005), திருவாசகம் மூலமும் தெளிவுரையும், குமரன் பதிப்பகம், சென்னை.

கதிரேசன் செட்டியார், (1980), திருவெம்பாவை விளக்கவுரை, கங்கை புத்தகநிலையம், சென்னை.

தொல்காப்பியம், பொருளதிகாரம், (1975), பேராசிரியர் உரை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

ஞானசம்பந்தனர். அ. ச., (2000), திருவாசகம் சில சிந்தனைகள், பாகம் 1, 2, 3, 4, 5, கங்கை புத்தகநிலையம், சென்னை.

சுப்பிரமணியம்பிள்ளை. கா., (1953), மாணிக்காவாசகர் அருளிய திருவாசகம், இரத்தினநாயகம் சன்ஸ், சென்னை.